# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8028191

1. District மாவட்டம்: கன்னியாகுமரி | PS: காவல்நிலையம்: V & AC Nagercoil | Year ஆண்டு: 2018 | FIR No. மு.த.அ. எண்: 2/2018 | Date நாள்: 19.01.2018

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: கு.வி.மு.ச | Sections பிரிவுகள்: 102 Cr PC and
(iii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 | Sections பிரிவுகள்: 13 (2) r/w 13 (1) (d)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 18.01.2018 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 13.30 hrs to Time to : நேரம் வரை 20.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.01.2018 Time நேரம் : 11.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
About 10 kms East R.T.O Office Nagercoil.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமயின், அந்நிலையின் அந்த காநிபெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S தங்கராஜ்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.சத்தியநாதன்
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 10.12.1966
(d) Nationality நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி கன்னியாகுமரிமாவட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி
Address : இருப்பு திருநெல்வேலி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1)திரு. முருகன், வட்டார போக்குவரத்து அலுவலர்,2) திரு.பிரபாகர், மோட்டார் வாகன ஆய்வாளர், 3)திருமதி.செல்வி அ-3 உதவியாளர், வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகர்கோவில் 4).திரு.[illegible], பதிவுறை எழுத்தர் வட்டார போக்குவரத்து அலுவலகம், நாகர்கோவில் 5).திரு.முருகபெருமாள், த/பெ ஆண்டியப்பன், கதவு எண். நம்பிஇடதெரு, நாகர்கோவில் 6). திரு.சிவா, த/பெ பாஸ்கரன், கதவு எண்.5. திலகர் தெரு, நாகர்கோவில் 7).திரு.வெங்கடேஷ், த/பெ ரெகுநாதன், கதவு [illegible] நாகர்கோவில் 8). திரு.செந்தில்,த/பெ.சிவதாணுபிள்ளை,கதவுஎண் 281/A7. போலீஸ் ஸ்டேசன் ரோடு, நாகர்கோவில்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுத்ததில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required):
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 19.01.2018ம் தேதி சுமார் 11.30 மணிக்கு துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகர்கோவில் கோ.மதியழகன் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.S.தங்கராஜ் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 18.01.2018-யும் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் S.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள், இருப்பு மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி. பெறுனர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கன்னியாகுமரி. அய்யா, பொருள்: நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு செய்த கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது. மேல் நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்வது தொடர்பாக. நான் நேற்று 18.01.2018-ம் தேதி பகல் 11.30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள என்னுடைய அலுவலகத்தில் இருந்தபோது நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் புதிய வாகனம் பதிவு செய்வதற்கும், ஓட்டுனர் உரிமம் வழங்க மற்றும் பிற வேலைகள் செய்து கொடுக்க வட்டார போக்குவரத்து அலுவலர்கள் லஞ்சம் வாங்குவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகவேண்டுகோளின்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் S. ஜோன் பெருமாள் ... ஆய்வாளர்நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டவருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டவர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
S. [signature] 19.01.2018
S. Thangaraj
Dy. Insp. Cell Officer
Tirunelveli

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 19/01/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
19.01.2018, 14.30

Name: பெயர் G.MATHIALAGAN
Rank: நிலை D.S.P........No. எண் ..........
V&AC, Nagercoil.

படி என்னுடைய தலைமையில் லஞ்ச ஒழிப்பு துறையினருடன் சேர்ந்து மேற்படி நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பகல் 13.30 மணி முதல் இரவு 20.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தின் பல்வேறு இடங்களில் இருந்தும், பல்வேறு நபர்களிடம் இருந்தும் கணக்கில் காட்டப்படாத மற்றும் கேட்பாரற்று கிடந்த பணம் ரூ.91,125/- கைப்பற்றப்பட்டது. இந்த பணமானது வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு அலுவலக பணிகள் செய்வதற்காக தனி நபர்களால் கையூட்டாக கொடுப்பதற்காகவும், வட்டார போக்குவரத்து அலுவலர்களால் கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் என கருதி கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கைகள் நேற்று 18.01.2018 பிற்பகல் 13.30 மணிக்கு ஆரம்பித்து இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி செயல்முறை நடவடிக்கை மற்றும் கைப்பற்றபட்ட பணம் ஆகியவற்றை இத்துடன் இணைத்து மேற்படி பணம் கைப்பற்றப்பட்ட நபர்கள் மீது வழக்கு பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒப்பம். S.தங்கராஜ், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி.

திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் துணை ஆய்வு குழு அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை 18.01.2018ம் தேதி பிற்பகல் 13.30 மணியளவில் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கீழ்கண்ட அலுவலர்கள் முன்னிலையில் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு முன்னிலை: 1)திரு.S.தங்கராஜ், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். 2)திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 3)திரு.C.சால்வன் துரை, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். 4)திருமதி.T.T.ரெமா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அங்கு தங்களது பணிகள் நிமித்தம் வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு வேலைகளை செய்து முடிப்பதற்கு இடைதரகர்கள் மூலமாகவும் நேரடியாகவும் லஞ்சம் பெற்று வருவதாக ரகசிய தகவல் கிடைத்ததன் அடிப்படையில் இன்று 18.01.2018-ம் தேதி மதியம் 13.30 மணிக்கு நாகர்கோவில்-திருநெல்வேலி ரோட்டில் தோவாளை தாலுகா விசுவாசபுரத்தில் அமைந்திருக்கும் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.மதியழகன் ஆய்வாளர்கள் திரு. C.சால்வன் துரை, திருமதி.T.T.ரெமா ஆகியோர் முன்னிலையில் திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.எஸ்.தங்கராஜ் அவர்களால் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. சோதனையின்பொழுது வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.கே.முருகன், மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நிலை-1 திரு.எஸ்.பிரபாகர், திரு.பெலிக்சன் மாசிலாமணி, நேர்முக உதவியாளர் திரு,மா. ஜோசப் சேவியர், அலுவலக கண்காணிப்பாளர் திருமதி. டெய்சி நேசம், கணக்கர் திரு.வா.கல்யாண சுந்தரம், உதவியாளர்கள் திருமதி.கோ.செல்வி, வே.மாடசாமி, திரு.மு. செல்வ குமார், தட்டச்சர்கள் திரு.பா.அலெக்ஸ் சாமுவேல் ராஜா, திரு.காளிராஜ், பதிவறை எழுத்தர் திரு.தங்க சிவா, அலுவலக உதவியாளர்கள் திரு.சி.கோபாலன், திரு.சி.அனந்தகிருஸ்ணன் மற்றும் எல்காட் பணியாளர்கள் திரு.சிவகுமார், திரு. ஜாண்லூயிஸ், கம்பியூட்டர் புரோகிராமர் திருமதி.பெமில்சா, ஓட்டுநர் திரு.ரமேஸ் ஆகியோர்கள் ஆஜரில் இருந்தனர். அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த அலுவலர்கள் மற்றும் எல்காட் ஊழியர்களின் வருகை பதிவேடுகளை பார்வையிட்டதில் அனைவரும் ஆஜரில் உள்ளதாக

உள்ளது. இந்த இரண்டு வருகை பதிவேடுகளும் கண்காணிப்பாளர் திருமதி.டெய்சி நேசம் மற்றும் நேர்முக உதவியாளர் திரு.மா.ஜோசப் சேவியர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.முருகனும் முடிவு செய்து மேலொப்பம் செய்துள்ளனர். இதில் துணை ஆய்வு குழு அலுவலர் தணிக்கை செய்து சுருக்கொப்பம் இட்டார். நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகமானது தோவாளை தாலுகா விசுவாசபுரத்தில் நாகர்கோவில்-திருநெல்வேலி ரோடுக்கு வடக்கு பக்கம் SRP Agencies என்ற பெயரில் உள்ள பெட்ரோல் பங்கின் வடக்கு பக்கம் வாடகை கட்டிடத்தில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. தரைதளம் மற்றும் முதல்தளம் கொண்ட இந்த கட்டிடத்தில் தரைத்தளத்தில் மட்டும் இயங்கி வரும் இந்த அலுவலகத்தில் நுழைந்தவுடன் அமைந்துள்ள ஹாலில் முதலில் இடது பக்கம் தபால், 4 Fee counter-கேபின்களும் அதை தொட்டு வடக்கு பார்த்த Shutter கதவும் அதை தொட்டு தெற்கு பக்கம் வடக்கு பார்த்து Record clerk-ன் மேஜையும் அமைந்துள்ளது. அந்த Shutter-ன் கிழக்கு பக்கம் LLR Room, அதை தொட்டு தெற்கு பக்கம் மேற்கு நோக்கி Elcott room-ம் அதை தொட்டு தெற்கு பக்கம் மேற்கு நோக்கி Class Room-ம் அதை தொட்டு தெற்கு பக்கம் மேற்கு நோக்கி மோட்டார் வாகன ஆய்வாளர்களின் அலுவலக அறையும் உள்ளது. இந்த கட்டிடத்தின் மேற்கு நோக்கிய நுழைவாசலின் வலது பக்கம் கிழக்கு நோக்கி முதலில் நேர்முக உதவியாளர் அறையும் அதை தொடர்ந்து வடக்கு பார்த்த வாசல் கொண்ட வட்டார போக்குவரத்து அலுவலரின் அலுவலக அறையும், அதை தொட்டு கிழக்கு பக்கம் வடக்கு நோக்கி Computer Server அறையும் அதனை தொடர்ந்து ஆவண காப்பக அறையும் உள்ளது. அந்த ஹாலில் 4-வது Fee counter-க்கு தெற்கு பக்கம் மேற்கு நோக்கி அமைந்த இருக்கையில் கண்காணிப்பாளர் திருமதி.டெய்சி நேசம் என்பவர் அமர்ந்து பணி செய்து வருகிறார். ஆவண காப்பக அறைக்கு எதிரில் வடக்கு பக்கம் வடக்கு பார்த்து Computer Programmer- இருக்கையும் அந்த இருக்கைக்கு மேற்கு பக்கம் வடக்கு நோக்கி C-Superintendent-ன் இருக்கையும் அமைந்துள்ளது.

மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள A-3-Fee counter-ஐ தணிக்கை செய்ததில் அங்கு அலுவலில் இருந்த உதவியாளர் திருமதி.செல்வி அவர்களிடம் இன்று மொத்தம் ரூபாய் 1,98,709/- வசூல் பணம் சரியாக இருந்தது. A-1-Fee counter-ஐ தணிக்கை செய்ததில் அலுவலில் இருந்த தட்டச்சர் திரு.அலெக்ஸ் சாமுவேல் ராஜா அவர்களிடம் இன்று மொத்தம் ரூபாய் 1,29,050/- வசூல் பணம் சரியாக இருந்தது. அதுபோல C-4-Fee counter-ஐ தணிக்கை செய்ததில் அலுவலில் இருந்த தட்டச்சர் திரு.காளிராஜ் அவர்களிடம் இன்று மொத்தம் ரூபாய் 1,51,950/- வசூல் பணம் சரியாக இருந்தது. C-1-Fee counter-ஐ தணிக்கை செய்ததில் அலுவலில் இருந்த உதவியாளர் திரு.செல்வகுமார் அவர்களிடம் இன்று மொத்தம் ரூபாய் 45,163/- வசூல் பணம் சரியாக இருந்தது. மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பெலிக்சன் மாசிலாமணி இருக்கையை தணிக்கை செய்ததில் இன்று கொடி நாள் வசூலாக மொத்தம் ரூபாய் 5,900/- வசூலாகியிருந்தது. இதற்கான ஆவணங்களை பார்வையிட்டதில் வசூல் செய்யப்பட்ட கட்டணதொகை சரியாக இருந்தபடியால் அந்த பணம் அப்போது அங்கு ஆஜரில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகர் அவர்களிடம் கையொப்பம் பெற்று ஒப்படைக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் பொழுது அலுவலர்கள் வைத்திருக்கும் பணத்தை குறிக்கும் cash in hand register-ஐ பார்வையிட்டதில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.பெலிக்சன் மாசிலாமணி ரூ.1050ம், நேர்முக உதவியாளர் திரு,மா.ஜோசப் சேவியர், ரூ.1000ம், அலுவலக கண்காணிப்பாளர் திருமதி.டெய்சி நேசம், ரூ.500ம், கணக்கர் திரு.வா.கல்யாண சுந்தரம், ரூ.160ம், உதவியாளரகள் திருமதி.கோ.செல்வி ரூ.300ம், வே.மாடசாமி ரூ.450ம், திரு.மு.செல்வ குமார் ரூ.280ம், தட்டச்சர்கள் திரு.பா.அலெக்ஸ்

சாமுவேல் ராஜா, ரூ.330ம், திரு.காளி ராஜ் ரூ.220ம், பதிவறை எழுத்தர் திரு.தங்க சிவா, ரூ.850ம், அலுவலக உதவியாளர்கள் திரு.சி.கோபாலன் ரூ.290ம், திரு.சி.அனந்த கிருஸ்ணன் ரூ.290ம் வைத்துள்ளதாக பதிந்துள்ளது. பணியாளர்களை சோதித்து பார்த்ததில் அந்த பதிவேடில் கூறியபடி பணம் சரியாக இருந்தது. சரி பார்க்கப்பட்ட பின் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. இந்த பதிவேட்டில் துணை ஆய்வுகுழு அலுவலர் தணிக்கை செய்து சுருக்கொப்பமிட்டார். இந்த திடீர் சோதனையின் பொழுது மேற்படி நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் கீழ்கண்டவாறு சரியான முகாந்திரம் தெரிவிக்கப்படாத பணம் கைப்பற்றப்பட்டது.

இன்று சோதனையின்பொழுது வட்டார போக்குவரத்து அலுவலகத்தை சோதனை செய்ததில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகர் அவர்களது அறையில் அவரது இருக்கைக்கு பின்புறமுள்ள இரும்பாலான ராக்கின் இரண்டாவது தட்டில் ஒரே கத்தையாக பணம் இருந்தது. அவைகளை எடுத்து எண்ணி பார்த்ததில் **ரூ.21,000 இருந்தது.** அந்த பணத்தை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகர் என்பவரிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றி தனக்கு தெரியாது என்றார். **எனவே தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-Iல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது.**

மேலும் அலுவலகத்தை சோதனை செய்ததில் 4-வது Fee counter-ல் அலுவலில் இருந்த பதிவறை எழுத்தர் திரு.தங்க சிவா என்பவருடைய இருக்கையை தணிக்கை செய்ததில் அவரது மேஜையின் கீழ் தரையில் இரண்டாக மடித்த நிலையில் போடப்பட்டிருந்த பணக்கத்தையை எடுத்து எண்ணி பார்த்ததில் மொத்தம் ரூபாய் **ரூ.14,620 இருந்தது.** அந்த பணத்தை பற்றி பதிவறை எழுத்தர் திரு.தங்க சிவா என்பவரிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றி தனக்கு தெரியாது என்றார். **எனவே தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-IIல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது.**

மேலும் அந்த அலுவலகத்தில் 3-வது கேபினில் அமைந்துள்ள 2-வது கட்டண கவுண்டரில் இருந்த கணினி மேஜையின் கீழ் தரையில் இரண்டாக மடித்த நிலையில் போடப்பட்டிருந்த பணக்கத்தையை எடுத்து எண்ணி பார்த்ததில் மொத்தம் ரூபாய் **ரூ.8,540** இருந்தது. அந்த பணத்தை பற்றி A-3 பிரிவு உதவியாளர் திருமதி.செல்வி என்பவரிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றார். **எனவே தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-IIIல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது.**

தொடர்ந்து இந்த அலுவலகத்தை சோதனை செய்ததில் வட்டார போக்குவரத்து அலுவலரின் அலுவலக அறைக்கு முன் பக்கம் ஹாலில் தரையில் கலைந்த நிலையில் கிடந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்ததில் மொத்தம் ரூபாய் **ரூ.10,580 இருந்தது.** அந்த பணத்தை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.முருகன் என்பவரிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றார். **எனவே தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-IVல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது.**

தொடர்ந்து இந்த அலுவலகத்தை சோதனை செய்ததில் வட்டார போக்குவரத்து அலுவலக எல்காட் அறைக்கும் Class Room-க்கும் இடையே இருந்த ஸ்டீல் ராக்கின் கீழ் தரையில் கத்தையாக கிடந்த ரூபாய் நோட்டுக்களை எடுத்து எண்ணி பார்த்ததில் மொத்தம் ரூபாய் **ரூ.6,710 இருந்தது.** அந்த பணத்தை பற்றியும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.முருகன் என்பவரிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றியும் தனக்கு எதுவும் தெரியாது என்றார். **எனவே தகுந்த முகாந்திரம் தெரிவிக்காததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-Vல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது.**

தொடர்ந்து இந்த அலுவலகத்தை சோதனை செய்ததில் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறையில் கறுப்பு நிற பேண்ட் மற்றும் பச்சை நிற சட்டையுடன் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை யார் என்று கேட்டதில் தன் பெயர் முருக பெருமாள் என்றும் அப்பா பெயர் ஆண்டியப்பன், கதவு எண்.34, நம்பி இடத்தெரு, நாகர்கோவில்-1 என்றும் தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணத்தை எடுக்க சொல்லி எண்ணி பார்த்ததில் அதில் ரூபாய் 16,000- இருந்தது. மேற்படி தொகையை எதற்காக வைத்துள்ளீர் என்று கேட்டதற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் அவர் மேற்படி பணத்தை தன்னுடைய பணிகளை செய்து தரவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.16,000/- **Annexure-VI** படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் அதே அறையில் நீல நிற ஜீன்ஸ் பேண்ட் மற்றும் கிரே கலர் சட்டையுடன் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை யார் என்று கேட்டதில் தன் பெயர் சிவா என்றும் அப்பா பெயர் பாஸ்கரன், கதவு எண்.5, திலகர் தெரு, நாகர்கோவில்-1 என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த சட்டையின் இடது முன் பக்க பாக்கெட்டிலிருந்த பணக்கத்தையை எடுக்க சொல்லி எண்ணிபார்த்ததில் அதில் மொத்தம் ரூபாய் 7,250- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளீர் என்று கேட்டதற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் அவர் மேற்படி பணத்தை தன்னுடைய பணிகளை செய்து தரவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.7,250 **Annexure-VII** படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் அதே அறையில் கருநீல நிற பேண்ட் மற்றும் வான நீல நிற சட்டையுடன் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை யார் என்று கேட்டதில் தன் பெயர் வெங்கடேஸ் என்றும் அப்பா பெயர் ரெகுநாதன் கதவு எண்.9/52, வணிகர் தெரு, பறக்கை நாகர்கோவில் என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் கையில் வைத்திருந்த கறுப்பு நிற பேக்கில் கத்தையாக ரூபாய் 2,500- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளீர் என்று கேட்டதற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் அவர் மேற்படி பணத்தை தன்னுடைய பணிகளை செய்து தரவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.2,500 **Annexure-VIII** படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர்களின் அறையை சோதனை செய்ததில் அந்த அறையில் வெள்ளை நிற ஜீன்ஸ் பேண்ட் மற்றும் சிவப்பு

கறுப்பு மற்றும் வெள்ளை நிற கட்டம் போட்ட சட்டையுடன் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை யார் என்று கேட்டதில் தன் பெயர் செந்தில் என்றும் அப்பா பெயர் சிவதாணு பிள்ளை, கதவு எண்.281/A7, போலீஸ் ஸ்டேசன் ரோடு, நாகர்கோவில் என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த பேன்டின் வலது பக்க பாக்கெட்டில் கத்தையாக ரூபாய் 2,545- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளீர் என்று கேட்டதற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் அவர் மேற்படி பணத்தை தன்னுடைய பணிகளை செய்து தரவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.2,545 **Annexure-IX** படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் அதே அறையில் வெள்ளை நிற பேண்ட் மற்றும் கருநீல நிற சட்டையுடன் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை யார் என்று கேட்டதில் தன் பெயர் மகேஸ் என்றும் அப்பா பெயர் ஜோஸ்லின் பிரைட், கதவு எண்.393, சைமண் நகர், நாகர்கோவில் என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த சட்டை முன் பக்க பாக்கெட்டில் கத்தையாக ரூபாய் 1,380- இருந்தது. அவரிடம் மேற்படி தொகையை எதற்காக வைத்துள்ளீர் என்று கேட்டதற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் அவர் மேற்படி பணத்தை தன்னுடைய பணிகளை செய்து தரவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.1,380 **Annexure-X** படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது.

<u>கீழ்கண்ட பணம்/ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.</u>

1. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகர் அவர்களது அறையில் அவரது இருக்கைக்கு பின்புறமுள்ள இரும்பாலான ராக்கின் இரண்டாவது தட்டில் இருந்து **ரூ.21,000** கைப்பற்றப்பட்டது.

2. பதிவறை எழுத்தர் திரு.தங்க சிவா என்பவருடைய மேஜையின் கீழ் தரையில் கிடந்த ரூபாய் **ரூ.14,620** கைப்பற்றப்பட்டது.

3. வட்டார போக்குவரத்து அலவலக A3 பிரிவு உதவியாளர் திருமதி.செல்வி அவர்களின் அறையில் கணிணியின் கீழ் தரையில் இருந்து கைப்பற்றபட்ட **ரூ.8,540/-**

4. வட்டார போக்குவரத்து அலுவலரின் அலுவலக அறைக்கு முன் பக்கம் ஹாலில் தரையில் கலைந்த நிலையில் கிடந்த ரூபாய் **10,580** கைப்பற்றப்பட்டது.

5. வட்டார போக்குவரத்து அலுவலக எல்காட் அறைக்கு செல்லும் வாசலுக்கு வலது பக்கம் இருந்த ஸ்டீல் ராக்கின் கீழ் தரையில் கிடந்த ரூபாய் **ரூ.6,710** கைப்பற்றப்பட்டது.

6. திரு.முருக பெருமாள் : ரூபாய் 16,000-

7. திரு.சிவா : ரூபாய் 7,250-

8. திரு.வெங்கடேஸ்: ரூபாய் 2,500-

9. திரு.செந்தில் : ரூபாய் 2,545-

10. திரு.மகேஸ் : ரூபாய் 1,380-

**ஆக மொத்தம் ரூ.91,125/- கைப்பற்றப்பட்டது**

**ஆவணங்கள்:**

1. வட்டார போக்குவரத்து அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேட்டின் ஜனவரி-2018 மாத ஜெராக்ஸ் நகல்.
2. வட்டார போக்குவரத்து அலுவலக எல்காட் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் வருகை பதிவேட்டின் ஜனவரி-2018 மாத ஜெராக்ஸ் நகல்.
3. பணியாளர் ரொக்க கையிருப்பு பதிவேட்டின் 18.01.2018 தேதிய ஜெராக்ஸ் நகல்.
4. வட்டார போக்குவரத்து அலுவலக 18.01.2018 தேதிய ரொக்க வரவு (கட்டணங்கள் A-1, A-3, C-1, C-4) abstract report.
5. வட்டார போக்குவரத்து அலுவலர், நாகர்கோவில் அவர்களின் செயல் முறை ஆணை எண்.4/m1/2017 (அலுவலக ஆணை 4/2017) நாள் 04.01.2018 ஜெராக்ஸ் நகல்.
6. நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலக 18.01.2018-ம் தேதிய Transaction Summary.

இந்த திடீர் சோதனையின் மூலம் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.மு.முருகன், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.பிரபாகர், A-3 உதவியாளர் திருமதி.செல்வி மற்றும் Record Clerk திரு.தங்க சிவா ஆகியோர்கள் இடைதரகர்களான (1) திரு.முருக பெருமாள், (2) திரு.சிவா, (3) திரு.வெங்கடேஸ், (4) திரு.செந்தில், (5) திரு.மகேஸ் மற்றும் வெளி நபர்கள் மூலம் லஞ்சம் பெற்று அரசு பணிகள் செய்யப்பட்டது தெரியவருகிறது. இதன்மூலம் அரசு அலுவலர்களுக்கு அரசு பணியை செய்வதற்கு இடைதரகர்கள் லஞ்சம் கொடுக்க தூண்டியுள்ள குற்ற செய்கையும் புலனாகிறது. மேலும் பொது ஊழியர்கள் லஞ்சம் பெற்று குற்ற நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டுள்ளதும் தெரியவருகிறது. இந்த நடவடிக்கை குறிப்பு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் உள்ள மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனை இன்று 18.01.2018-ம் தேதி மாலை 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பங்கள். 1.S.தங்கராஜ், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, 2.திரு.G.மதியழகன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, 3.திரு. C.சால்வன் துரை, ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, 4.திருமதி.T.T.ரெமா, ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, 5.திரு.முருகன், வட்டார போக்குவரத்து அலுவலர், நாகர்கோவில், 6.திரு.பிரபாகர், மோட்டார் வாகன ஆய்வாளர், வட்டார போக்கு வரத்து அலுவலகம் நாகர்கோவில், 7.திருமதி.செல்வி, உதவியாளர், வட்டார போக்கு வரத்து அலுவலகம் நாகர்கோவில். 8.திரு.தங்க சிவா, பதிவறை எழுத்தர், வட்டார போக்கு வரத்து அலுவலகம் நாகர்கோவில், 9.திரு.முருகபெருமாள், 10.திரு.சிவா, 11.திரு.வெங்கடேஸ், 12.திரு.செந்தில், மற்றும் 13.திரு.மகேஸ்

இணைப்பு:
Annexure I to X.

Sir, Received the complaint on 19.01.18 at 11.30hrs made Preliminary Enquiry and registered a case in Nagercoil V&AC, Cr.No.2/2018 u/s 102 CrPC and 13(2) r/w 13(1) (d) of the Prevention of Corruption Act 1988 on 19.01.18 at 14.00hrs. sd.G.Mathialagan, DSP, V&AC, Nagercoil.

The original complaint, Proceedings of Inspection Cell Officer, Tirunelveli, Thoothukudi and Kanyakumari District at Tirunelveli, seized amount Rs.91,125/- and original FIR were sent to the Hon'ble Chief Judicial Magistrate Nagercoil cum Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, and copies sent to concerned higher officials.